Regd. No. M. 4593. KUDI ARASU 8 பக்கங்கள்

# குடி அரசு

Estd 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-0 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 16-3-1946 பங்குனிமீ 3உ { மலர் 23

## திராவிட நாடு நம் பிறப்புரிமை

★

3-3-46ந் தேதி சோழங்கநல்லூரில் நடைபெற்ற திருச்சி ஜில்லா திராவிட கழக 17வது மாநாட்டில் தோழர் எ. சின்னதுரை அம்பலகாரர் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை.

பெரியார் அவர்களே, மாநாட்டுப் பிரதிநிதிகளே, தாய்மார்களே!

வரவேற்புக் கழகத்தார் சார்பாக உங்கள் எல்லோரையும் மனமுவந்து அழைக்கின்றேன். வயல் சூழ்ந்ததும் கற்குடி மாமலைக்கு அண்மையிலுள்ளதும் எங்கு பார்த்தாலும் தென்னஞ்சோலைகளும் நெல் வயல்களும் காணப்படும் இயற்கை வளங்கள் நிரம்பிய இக்கிராமத்தில் இம் மாநாடு கூடியிருப்பதுகண்டு பெரிதும் மகிழ்கின்றேன்.

திராவிடர்களாகிய நாம் திராவிடரென்ற உணர்ச்சி நிரம்பினவர்களாய் ஒன்றுபட்டு நமக்கென நாடுபிரித்து அரசியல் உரிமைகள்பெற்று பிணி நீங்கி, பஞ்சம் நீங்கி, கல்வி கற்று, தொழில்கள் மேற்கொண்டு எல்லா நலன்களுடனும் இன்பமாய் வாழவும், உலகமற்ற மக்கள் போல அடிமைகளாய், ஊமையாய், அறிவிலிகளாய், நடைப்பிணங்களாய் வாழ்வதெல்லாம் நீக்கி வீரமுள்ள அறிவு படைத்த மேம்பாடுடைய மக்களாய் வாழ விரும்புகின்றோம்.

சென்ற சில ஆண்டுகளாக நம் அருமைத் தலைவர் பெரியாரின் இடைவிடாது செய்யப்படும் தொண்டால் திராவிடன் விழிப்படைந்து தந்நிலை உணர்ந்து எழுச்சிகொண்டு வருவது வெளிப்படை. எங்கே பார்த்தாலும் கழகங்கள் தமிழ் மொழிப்பற்று, தமிழ் இசையில் அளவிலாக் காதல். அதை வளர்க்கப் பல முயற்சிகள், தமிழ் நாடகம் புராண ஆபாசங்களைவிட்டு தன்னுணர்வுபெற்று மக்களிடையே புது உற்சாகத்துடன் விளங்குதல் சடங்குகள் விடப்படுதல், மாணவர்களிடையே பெரும் எண்ணங்களும், செயலும் தமிழ் பெண்கள் வெளிவந்து ஆண்களோடு சேர்ந்து செயலாற்றுதல் இவ்வாறான பல செயல்களைக் காண்கின்றோம்.



தோழர் எ. சின்னதுரை

திராவிடநாடு என் தனியாக நின்று இயங்க வேண்டுமென்பது பற்றி நான் உங்கட்கு சொல்ல வேண்டுவதில்லை. அது நம் பிறப்புரிமையாகும். நமக்கு அது கிடைத்தே தீரும்.

இம் மாநாட்டில் பிரதிநிதிகளாகிய நீங்கள் நன்கு ஆராய்ந்து வேண்டிய முடிபுகள் காணவேண்டுமென ஆசைப்படுகின்றேன். நாட்டில் பல கஷ்டங்கள், உணவு கஷ்டம் இன்னும் பல தொல்லைகள் இதன் மத்தியிலே கூடியிருக்கின்றோம். ஆயினும் நம் முயற்சி வெற்றியே யாகுமென்று சொல்லவும் வேண்டுமோ?

தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலிதரும் முயற்சிதான் வேண்டும் அதைத்தான் நானும் எதிர்பார்க்கின்றேன் உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும். மேற்கொள்ளுங்கள் முயற்சியை, இன்றே இப்பொழுதே. பல துறையிலும் பணியாற்றுங்கள், நாடு நல்ல வகையில் வழிகண்டு முன்னேற வகை செய்யுங்கள்.

பிரதிநிதிகளே! மற்றுமொருமுறை உங்களை அழைக்கின்றேன். இம்மாநாட்டிற்கு எங்கள் அழைப்பிற்கு இணங்கி வந்த பழயகோட்டை பட்டக்காரர் தோழர் அர்ச்சுனன் அவர்கட்கும், தலைவர் பெரியார் அவர்கட்கும், பெரியாருக்கு உறுதுணையாய் நின்று தொண்டாற்றி வரும் தளபதி அண்ணாதுரை அவர்கட்கும் மற்ற நண்பர்கட்கும் எங்கள் வணக்கம். வாழ்க பெரியார், வாழ்க தமிழ் மொழி, வாழ்க தமிழ்நாடு, வாழ்க தமிழ் மக்கள்.

## புறப்படுவீர் தோழர்களே!

கோடை விடுமுறை நெருங்கிவிட்டது. மாணவத்தோழர்களை பிரசாரத்திற்கு அனுப்பும்படி பல இடங்களிலிருந்து கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன.

மாணவர்கள் பொறுப்பான முறையில் பிரச்சாரம் செய்யும்பொருட்டு பயிற்சிக் கூடம், திருச்சி அல்லது ஈரோட்டில் விரைவில் ஏற்படுத்தி, நாலைந்து நாட்களுக்கு பெரியார், அண்ணாதுரை, தோழர்கள் வேதாசலம் மற்றும் பல அறிஞர்களைக்கொண்டு அறிவுரைகள் நிகழ்த்திப் பல மாவட்டங்களுக்கும் மாணவத் தோழர்களைப் பிரித்து அனுப்ப ஏற்பாடாகிறது.

பிரசாரத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கீழ்கண்ட விவரங்களை இன்னும் ஒரு வாரத்திற்குள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

பயிற்சிக்கூடத்தில் உணவு ஏற்பாடு முதலியன செய்யவேண்டியிருப்பதால் வரக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை உடனே தெரியவேண்டியிருக்கிறது.

1. பெயர்:
2. தற்பொழுது பயிலும் பள்ளி அல்லது கல்லூரியும், வகுப்பும்.
3. பழைய மாணவராயின் தற்பொழுது செய்யும் வேலை.
4. பிரசாரம் செய்வதில் தங்களுக்குள்ள தகுதி, அனுபவம்.
5. எந்தத் தேதியிலிருந்து வரக்கூடும்?
6. பிரச்சாரத்தில் எத்தனை நாள் கலந்துகொள்ள முடியும்?
7. தற்போதைய முகவரி.
8. ஓய்வு கிடைத்ததும் தங்கும் முகவரி.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

## போராட்டம் துவக்க பெரியாருக்கு வேண்டுகோள்

### இந்தி எதிர்ப்பை நாங்களே நடத்துவோம்

**மாணவர் மாநாட்டுத் தீர்மானங்கள்**

23, 24-2-46 தேதிகளில் நீடாமங்கலத்தில் கூடிய திராவிட மாகாண மாணவர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. தமிழ்க்கலைஞர்களாம் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராச பாகவதர் ஆகியவர்களைக் கருணை காட்டி விடுதலை செய்யுமாறு சென்னை கவர்னரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

முன்மொழிந்தவர்: இமயவரம்பன்.
வழிமொழிந்தவர்: பொன்னன்.

2. இந்தி மீண்டும் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டால் தக்கதொரு போராட்டம் மாணவர்களே நடத்துவதென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

முன்: மு. கருணாநிதி,
பின்: வை. திருநாவுக்கரசு. ஈஸ்வரன்.

3. வடநாட்டுப் பிடியிலிருந்து திராவிடநாட்டைப் பிரித்து சகல துறைகளிலும் திராவிடம் தனியாய் இயங்க வேண்டும் என்ற கொள்கையை யுடைய திராவிட கழகத்துடன் ஒத்துழைப்பது.

முன்: ஜனார்த்தனம்.
வழி. குழந்தையா.

4. பாடத்திட்டங்களிலுள்ள பகுத்தறிவுக் கொவ்வாத மதநூல்களைப் போதிப்பதை உடனே மாற்றிவிட்டு அறிவுவளர்ச்சிக்கான முறையில் அமைக்க வேண்டுமென்று அரசியலாளரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

முன்: அப்பாவு,
வழி: திருமாறன்.

5. படிப்பவர் தொகை அதிகரித்தும் பள்ளிகளை அதிகரிக்காததால், அநேக மாணவர்கள் படிக்க வசதியின்றியிருப்பதால் உடனே பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

முன்: வில்லாளன்.
பின்: இளஞ்சேரன்.

6. உலகில் இனபேதம் என்பதே ஒரு கொடுமையான கொள்கை என அறிஞர்களெல்லாம் சொல்லி வருகின்றபோது, இந்தத்திராவிட நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரு சிறு கூட்டம் இந்த நாட்டிலுள்ள திராவிட இனத்தின்மேல் பேத உணர்ச்சிகொண்டு கொடுமையான ஆதிக்கம் செலுத்திவரும் நிலையை மாற்றி இன விடுதலையைப் பெற ஒரு பெரியதொரு போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்று, இன விடுதலை உணர்ச்சியை இந்நாட்டில் பரப்பிவரும் பெரியார் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. மாணவர்களாகிய நாங்கள் முன்னணியில் நிற்போம் என உறுதி கூறுகின்றோம்

முன்: ஈ. வி. கே. சம்பத்.
பின்: அரங்கண்ணல்.

7. சென்ற 2-ஆண்டுகள் கோடையில் சுற்றுப்பிரயாணம் செய்து கட்சிக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தது போலவே இந்த ஆண்டிலும் இனி எந்த ஆண்டிலும் பிரசாரம் செய்கிறோம்; கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்க்க உதவுகிறோம் என்று உறுதிகூறுகின்றோம்.

முன்: தவமணிராசன்.
பின்: சத்தியேந்திரன்.

---

## கரூர் தாலூகா திராவிடர் கழக 4வது மாநாடு

தவுட்டுப்பாளையம் நாகம்மையார் பந்தலில் 3-2-46ல் நடைபெற்றது. கறுப்புச்சட்டைப்படை வீரர் புடைசூழ பெரியார் ஈ. வெ. ரா, மாநாட்டுத் தலைவர் தோழர் சண்முகவேலாயுதம் ஆகியோர் காரில் அமர்ந்திருக்க, பெரியதொரு ஊர்வலம் நடைபெற்றது. மாநாடு துவக்கத்திற்குமுன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கறுப்புச் சட்டைப் படையினருக்கு வீரஉரை நிகழ்த்தினார்கள்.

கரூர் தோழர் என். ரத்தினம் சிவப்பை மத்தியில் கொண்ட கறுப்புக்கொடியை ஏற்றியபின் தோழர் எ. சித்தையன் மாநாட்டைத் திறந்துவைத்தார். தோழர் ஆ. கணபதியின் வரவேற்புரைக்குப்பின் தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்கள் தலைமைதாங்கி விரிவானமுறையில் தலைமையுரையாற்றினார். தோழர்கள் குழந்தைசாமி, உழவன் பழனிக்குமரன், ஆகியோர் பேசினார்கள். பிற்பகல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றி அருமையான விளக்கங்களோடு அரிய சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரையுடன் மாநாடு கலைந்தது.

மாநாட்டின் தொடர்ச்சியாகப் புதுப்பாளையம் தோழர் சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் குழந்தைசாமி, உழவன் பழனிக்குமரன், கரிகாலன், குமாரவேல் இன்னும் பல தோழர்கள் பேசினார்கள்.

## ஆங்காங்கே!

மாயவரம் தாலூகாவில் கறுப்புச் சட்டைப் படையில் சேர விரும்புவோர் கூறைநாடு திராவிடர் கழகத்தில் காலை 8மணி முதல் மாலை 8மணி வரையில் சேரலாம்.

o o

திருச்செங்கோடு தாலூகாவில் திராவிடர் கழகத்தில் சேருவோர் எஸ். கே. வரதராசலு தெப்பக்குளத்தெரு திருச்செங்கோடு என்ற முகவரியில் சேரலாம்.

o o

திண்டுக்கல்லில் திராவிடர் கழகத்தில் சேர எல். வீராசன் C/o எல். வீ. எஸ். தாகுமண்டி, தாடிக்கொம்பு ரோடு, திண்டுக்கல் என்ற முகவரியில் சேரலாம்.

o o

வடஆற்காடு ஜில்லாவில் திராவிடர் கழக ரசீது புத்தகம் வேண்டுவோர் ஆர். வெங்கட்ராமன் தலைவர், ஜில்லா திராவிடர் கழகம், வடஆற்காடு என்ற முகவரிக்கு எழுதுக.

o o

மதுரையில் திராவிடர் கழக அங்கத்தினராகச் சேர சி. முத்திருளாண்டி 55, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை. என்ற முகவரியில் சேரலாம்.

மேற்கு சென்னை திராவிடர் கழகத்தில் அங்கத்தினராக சேருவோர் நெ. 39, சேக்மோதின் சுபேதார் வீதி, கழகக் கட்டிடத்தில் மாலை 6-மணிக்குமேல் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.


## தலைவர்— தளபதி படம்

( 0-4-0 )

திராவிடநாடு அமைந்த படத்தில் நமது ஒப்பற்ற திராவிடர் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், நமது அன்புக்குரிய திராவிடர் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்களுடைய உருவமைந்த படத்தை பதிய வைத்ததுமான (காலண்டர்கள் அல்ல) படம் உயர்ந்த ஆர்ட்பேப்பரில் மனதை கவரும் முறையில் அண்மையில் வெளிவருகிறது.

விற்பனைக்கு கிடைக்கும் 0-2-0 அணா படங்கள்: தலைவர், தளபதி, கவிஞர் இவர்களுடைய உருவமைந்த படம், ஆர்ட் கார்டில் அச்சிட்டு வெளிவந்துள்ளது.

விபரங்களுக்கு:

திராவிடன் பதிப்பகம்,

தபாற்பெட்டி 18, வேலூர் (வ.ஆ.) :: 133 லாங்குபசார், வேலூர் (வ.ஆ.)


-ரோஜா முத்தையா

# பார்ப்பனர்களுக்கு சர் சி. பி. அறிவுரை

9-3-46ந் தேதி கூடிய சேலம் பிராமண மாநாட்டின் போழ்து சர் சி. பி. இராமசாமி அய்யர் நிகழ்த்திய தலைமையுரையில் கீழ்க்கண்டவாறு பிராமணர்களுக்கு அறிவுறுத்திப் பேசினார். எந்தப் பத்திரிகையும் அய்யரின் பேச்சை சரியாகப் பிரசுரிக்கப்படாததன் காரணம் தெரிகிறது.

1. "பிறப்பின் காரணமாக ஒருவன் பிராமணன் ஆகமாட்டான். குணத்தாலும் செயலாலுமே பிராமணத்வம் நிச்சயிக்கப்படும்.

2. வாழ்க்கையில் தனக்குரிய உயர்ந்த குறிக்கோளையும் தூயமனத்தையும் துறந்து உத்தியோகத்துக்கும் பதவிக்கும் செல்வத்துக்கும், கசாப்புக்கடைக்காருடனும், சாப்பாட்டுக்கடைக்காரனுடனும் போட்டியிடுவோன் தன்னைப் பிராமணன் என்று சொல்லிக்கொள்ளுவது பித்தலாட்டமாகும்.

3. "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் அரசியல் நிர்வாகத்தில் தகுதியும் வினைத்திட்பமும் (Merit and efficiency) கெடலாயின" என்ற பல்லவியை நீங்கள் பாடப்பாட பிராமணரல்லாதாரின் மனதைப் புண்படுத்துவதுமன்றி அவர்கள் பகைமையையும் பெருக்கிக்கொள்ளுகிறீர்கள்.

4. பிராமணரல்லாதாரை ஏளனம் செய்து அவரை எதிர்த்துப் பகைக்கின் பிராமண இனம் சீரழிந்து வேரறுந்து போகும்.

6. பூதர் ஆதியில் அறிவுத்துறையிலும் அன்பின் வழியிலும் வாழ்ந்து வந்தனர். பின்னர் பணம் தேடுபவர்களாகிக் கடன்கொடுத்து ஏழை மக்களைத் துன்புறுத்திப் பல துறைகளிலும் ஆதிக்கம் பெற்றுவிட்டமையால் பிறர் அவர்களிடம் பொறாமை கொண்டு அவர்களை ஒடுக்கத் தொடங்கினர். அதனால் அவர்கள் இன்று கொடுமையான தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டனர்! ஆதலால் பிராமணர்கள் அந்நிலை எய்தாமல் இருக்க தங்களைக் காலத்திற்கேற்றபடி திருத்திக்கொள்ள வேண்டுவது அத்தியாவசியமாகும்.

6. நிலைமைக் கேற்பவும், சற்றுச் சார்புக் கொப்பவும் தம்மைப்பக்குவப் படுத்திக் கொள்ளுவதே பிராமணரது இயல்பென வரலாறு கூறுகின்றது. அம்மரபியல்பை இன்று மறப்பதும் துறப்பதும் பேதமையாகும்,

7. யாகங்களைச்செய்து புலால் உண்ணுதலும், சோமபானம் அருந்துதலும் நமது பண்டைக்காலத்து வழக்கம். தென்னாடு போந்தபின்னர் இந்நாட்டின் தட்பவெப்ப நிலைமைக்கேற்ப நம்மவர் புலாலையும் குடியையும் அறவே நீக்கிவிட்டனர்.

8. வேதங்களின் கர்மகாண்டத்தையே பின்பற்றிவந்த நம்மவர் க்ஷத்திரியரிடம் சென்று ஆத்ம வித்தையையும் உபநிடதங்களையும் கற்றுக்கொள்ளவில்லையா?

9. நமக்கு எதிர்ப்பாகத் தோன்றிய பௌத்தம், ஜைனம் முதலிய மதங்களின் சீரிய கொள்கைகளைத் தழுவி நமதாக்கிக் கொள்ளவில்லையா?

10. மிகவும் முந்திய காலத்திலேயே நம்மவர் கடல்கடந்துசென்று பல யாகங்களைச்செய்து மன்னர்கள்பால் பரிசு பெறவில்லையா?

11. நமது இனத்தவராகிய நம்பூத்திரிகள் மலையாள நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கேற்பத் தமது ஒழுக்கங்களை மாற்றியமைத்துக்கொள்ளவில்லையா?

12. மகம்மதிய ஆட்சி நிலவியபோது நம்மவர்கள் அமைச்சர்களாகவும் அலுவலாளர்களாகவும் இருந்து ஆக்கம் பெறவில்லையா?

13. ஆங்கிலேயர் வந்தபின்னர் அவர் தம் மொழியைக்கற்று நாம் வாழவில்லையா?

14 இங்ஙனம் காலத்திற்கேற்ற கோலம் தாங்கிய நம்மவர் இன்று என் நம் மரபியலைக் கைவிட வேண்டும்? அதனால் இன்று பிராமணரல்லாதார் நமது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் கண்டு பொறாமை கொண்டு நம்மை வெறுப்பது உண்மை தான்? நீங்கள் செய்யவேண்டுவது என்னவெனில்; உத்தியோகம் உங்களை நாடிவந்தால் வரட்டும்: இல்லையேல் நீங்கள் அதனை நாடவேண்டாம்.

15. உங்கள் பிள்ளைகளுக்குக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இடம் மறுக்கப்படுகிறதென்கிறீர்கள். அப்படியாயின் திரண்ட நிதியைச் சேர்த்துப் புதிய கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும், கைத்தொழிற்சாலைகளையும் தொடங்குங்கள். அவற்றில் எல்லா மாணவர்களையும் ஜாதி, குல, மத வேறுபாடின்றிச் சேர்த்துக்கொள்ளுங்கள். பண்டைக்காலத்தில் நமது பொருளாதார நிலைமை தாழ்ந்திருந்தது; இன்று அப்படியில்லை. ஆதலால் பிறர் உதவியின்றியே பிராமணர்களே இதனைச் செய்யக்கூடும்.

16. நகத்தில் மண்படாமல் வாழும் பழைய வழக்கத்தைவிட்டு விவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளில் புகுந்து செயலாற்றுங்கள்.

17. பிராமணர்களுக்குள் இருக்கும் பல பிரிவுகளும் ஒன்றுபடவேண்டும், ஒன்றுபட்டு உலகத்தோடு ஒட்ட ஒழுகி முன்னேறவேண்டும்.

18. பழைய பெருமையை மறந்து புதிய உலகத்திற்கேற்ப நடந்துகொள்ள உங்களுக்கு விருப்பமில்லையேல் இம்மாநாடு இக்கணமே கலைந்து விடலாம்.

19. நமது முன்னோர் இரத்தலை ஒரு தொழிலாகக் கொண்டிருந்தனர். முற்காலத்தில் கொடுப்போரும் விரும்பிக்கொடுத்தனர், பிராமணரும் மகிழ்ந்து ஏற்றனர். இக்காலத்தோ, அன்பால் உந்தப்பட்டு பிராமணருக்குக் கொடுப்போர் இலர் என்பது வெள்ளிடை. ஆதலால் எவரிடத்தும் யாசிக்கவேண்டாம். தன்கையே தனக்குத் துணையாகத் தன்மானத்தோடு வாழுங்கள்." என்று பிராமணர்களுக்கு அறிவுறுத்திப் பேசினார். இதை எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை.

---


கடல் கடந்த நாடுகளில் சேவை புரியும் பல்லாயிரக்கணக்கான இந்திய, பிரிட்டிஷ் துருப்புகள் இன்னும் அதிகமான சௌகரியங்களை அடைய ஆசைப்படுகின்றன.

★

எனவே

நமது துருப்புகளை எவ்வளவு தூரம் சந்தோஷமாகவும், சௌகரியமாகவும் வைத்திருக்க முடியுமோ அதற்கு மேலும் பணம் தேவை என்று

**மே. த. கவர்னரின்**

சைன்யநிதி, நிவாரணநிதி மிக உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது

தயவுசெய்து உங்களது பணத்தை "சைன்ய நிதி, நிவாரண நிதி" என்று குறிப்பிட்டு ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ஞு மார்ச்௴ 16-௳

# போலி ஜஸ்டிஸ் வண்டவாளம்

தோழர் பி. பாலசுப்பிரமணியத்தால் உண்டாக்கப்பட்ட போலி ஜஸ்டிஸ் கட்சியின் போலித் தலைவரான சர் பி.டி. ராஜன் அவர்கள் மார்ச்சு 10ம் தேதி சென்னை மிமோரியல் ஹாலில் ஒரு கூட்டம் கூட்டி தான் ஏன் சட்டசபை தேர்தலுக்கு ஆட்களை நிறுத்தவில்லை என்பதைப்பற்றி பேசியிருக்கிறார். இதை அவர் எப்போது பேசி இருக்கிறார் என்றால் தனது தலைமையின் மதிப்பு மரியாதை எல்லாம் சந்திசிரித்த பிறகே பேசி இருக்கிறார்.

ஜஸ்டிஸ்கட்சி திருச்சியில் தேர்தலுக்கு ஆட்களை நிறுத்தக்கூடாது என்று தீர்மானித்தபிறகு இந்தத் தலைவர் மத்தியசட்டசபை தேர்தலுக்கு வெகு பாடுபட்டு வலை போட்டு தேடிப்பிடித்து இரு சுப்பிரமணியங்களை நிறுத்தினார். ஒரு சுப்ரமணியம் தலைவரைக் கேட்காமல் வாப்சு வாங்கிக் கொண்டார். மற்றொரு சுப்ரமணியம் தேர்தலுக்கென்று தாராளமாக பணம் வசூல்செய்து கொடுக்கப்பட்டு "கொள்கை"களையும் விட்டுக்கொடுத்து நல்ல தோல்வி அடைந்த பிறகு "ஜஸ்டிஸ் கட்சி இனி வேண்டியதில்லை, பார்ப்பனரல்லாதாருக்கு நன்றிஇல்லை. நான் இனிமேல் பார்ப்பனரல்லாதாருக்கென்றோ, ஜஸ்டிஸ் கட்சியாருக்கென்றோ எவ்வித உதவியும் செய்யப்போவதில்லை. கட்சியை கலைத்துவிடப் போகிறேன்" என்று சொல்லி அறிக்கைவிட்டு பார்ப்பனப் புன்முறுவல்பெற்று அமர்ந்தார்.

வாப்சு வாங்கிக்கொண்ட சுப்ரமணியம் நின்று பார்க்காமலேயே "என்னைவிட காங்கரஸ் அபேட்சகர் மிக்க பெரிய மனிதர், கண்ணியம் வாய்ந்தவர் அவரோடு போட்டி போடுவது தவறு" என்று சொல்லி அறிக்கை விட்டுவிட்டு தலைவரை ஏமாறச்செய்துவிட்டு விலகிக் கொண்டார். இந்த இரண்டு நடிப்பும் நடந்த பின்பு தலைவர், தாம் அடைந்த வெட்கக்கேட்டிற்கு சமாதானமாக "தகுதி இல்லாத, விரும்பத்தகாத அன்பாய்புலர், அண்டிசைபின் ஆட்களை நிறுத்தியதால் எனக்கு இந்த கதி ஏற்பட்டது" என்று காரணம் காட்டிவிட்டார். பிறகு நல்ல அபேட்சகர்களைத் தேடி எடுத்து நிறுத்திவைக்க மாகாணம் எல்லாம் சுற்றிக் கடைசியாக "நான் சட்டசபைக்கு ஆட்களை நிறுத்தவில்லை" என்று சொல்லிவிட்டார். அதுவும் எப்போது சொன்னார் என்றால் கட்சி அங்கத்தினர்களான தோழர்கள் தாமோதரம் நாயுடு, கண்ணப்பர், தண்டபாணிபிள்ளை, ரங்கசாமி ரெட்டியார், பக்தவச்சலம் நாயுடு முதலிய பலரை நிறுத்திவைத்தோ அல்லது தலைவர் அனுமதி இல்லாமல் இவர்களாகவே நின்றபிறகோ யோசனைசெய்து அவர்களிடம் "கட்சி அங்கத்தினர்" பதவி, ராஜிநாமா வாங்காமலும் அவர்களைக் கட்சியைவிட்டு விலக்காமலும் அந்த சங்கதிகளை மூடி வைத்துக்கொண்டு "நான் யாரையும் நிறுத்திவைக்கவில்லை" என்று சொல்லி இருக்கிறார்.

இவரது இந்த செய்கையால், இவரது கோஷ்டியார்களான தோழர்கள் நடத்தையால் ஏற்கனவே மிகவும் கஷ்டமும் தொல்லையும் அடைந்து எதிரிகளால் கேவலப்படுத்த இடமேற்பட்ட ஜஸ்டிஸ் கட்சியானது மேலும் கேவலப்படுத்தப்படத்தக்க நிலையை அடையவேண்டியதாகிறது.

இந்தக் கூட்டத்தார் தங்களுக்கென நாட்டில் எவ்வித செல்வாக்கும் இல்லாததால் ஒரு தோழர் பாலசுப்ரமணியத்திற்கு வசப்பட்டு, அவர் இழுத்தபடியெல்லாம் சென்று தங்கள் பெயரையும் பணத்தையும் கொடுத்து, ஒரு பயித்தியக்கார—பொறுப்பை வகிக்க வேண்டிய அவசியமில்லாத ஒரு கவர்னரை நம்பி, நம் பரம்பரை எதிரிகளான பார்ப்பனப் பத்திரிகைகள் கொடுக்கும் விளம்பரத்தின் தன்மை அறியாமல் ஏமாந்து போய் மாட்டிக்கொண்டதன் பலன் என்ன ஆயிற்று என்றால் பார்ப்பனரல்லாதாரில் எவ்வளவு மோசமான சுயநலக்காரரும், சுயஞானமும், மான உணர்ச்சியும் அற்றவர்களும் இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்திற்று என்றுதான் சொல்லக்கூடியதாயிற்று எனலாம்.

இன்று இந்தப் போலி ஜஸ்டிஸ் கட்சியார் கொள்கை என்ன என்று இந்த நடத்தைகளைக் கொண்டு பார்த்தால் பட்டம், பதவி, நியமனம் ஆகியவைகளைத் தள்ளமுடியாது, ஆனால் கட்சியின் பேரால் பாடுபடாமல், கட்சி மக்களுக்கு அடையாளம் தெரிந்தவர்களாகக்கூட, பெயரளவில் அறிமுகமானவர்களாகக்கூட இல்லாமல், கட்சி பெயரைச் சொல்லிக்கொண்டு வாழவேண்டும், பணம் திரட்டவேண்டும், பதவி பெறவேண்டும் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை என்று சொல்லும்படியாக ஆகிவிட்டது. இந்த யாரோ ஒரு சிலருடைய இப்படிப்பட்ட சுயநலத்திற்குஆக 4½கோடி மக்கள் நலத்தையும், மானத்தையும் பாதிக்கும்படியாக நடந்துகொண்ட இந்தக்கும்பலை மிகுதியும் துணிவுகொண்ட கும்பல் என்றே கூறலாம்.

இந்தக்கூட்டம் இப்படிப்பட்ட காரியம் செய்யாமல் இருந்திருப்பார்களானால் இந்தசமயம் உண்மையிலேயே ஜஸ்டிஸ்கட்சி என்பதான திராவிடர் கழகம் மிகவும் மதிக்கத்தக்கதும் போற்றத்தக்கதும் வலிவுள்ளதுமான ஒரு கட்சியாக மற்ற வெளி மக்களுக்கும் ஆங்கிலேயருக்கும் தோன்றி இருந்திருக்கும். ஆனால் சர் ஆர். கே. ஷண்முகம் அவர்களே இந்த நாச வேலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார் என்றால், மற்ற சுப்ரமணியங்கள் முதலியவர்கள்மீது எப்படி குற்றமோ குறையோ கூறமுடியும்? எது எப்படி ஆனாலும் உண்மையான ஜஸ்டிஸ் கட்சியான திராவிட கழகத்தின் கொள்கைகள் திட்டங்கள் இன்று போலி ஜஸ்டிஸ்கட்சி மாத்திரமல்லாமல் மற்றும் பல முக்கிய கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளவும், பாராட்டப்படவுமானவைகளாகி

விட்டன. அதாவது இப்போது அதில் இருக்கும், சேரும் மக்களுக்கு தன்னலத்தை சிறிதாவது விட்டுக்கொடுக்கவும், கட்சிக்கு பாடுபடுவதன் மூலமே நாம் பயன் பெற முடியும் என்கின்ற எண்ணம் கொள்ளவுமான உணர்ச்சி சிறிதாவது வேண்டும் என்பதுதான். ஆனால் இன்று அப்படிப்பட்ட பழய நபர்கள் நம் கட்சியில் அருமையாகிவிட்டதோடு, கட்சியை பலிகொடுத்து வாழ்வதை மிக கெட்டிக்காரத்தனமாக கருதும் மக்கள் விலக்கப்படவேண்டிய சங்கடமான நிலைமையும் இருந்து வருகிறது.

எனவே நாம் நம் கட்சியின் அதாவது $4\frac{1}{2}$கோடி திராவிட மக்களின் நலன் கோரி இந்த நிலையை இன்னமும் பொருக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஆனால் நமது வாலிபத் தோழர்களும், மாணவத்தோழர்களும் நமக்கு "வழிகாட்டி"களாக இருந்து இப்போது நழுவிவிட்ட இப்படிப்பட்ட பெரியோர்களுடைய தன்மையைப் பின்பற்றாமல் நம் சுயநலத்தை தகுந்த அளவுக்கு விட்டுக்கொடுத்து கட்சிக்குப் பாடுபட்டு, கட்சியை மேன்மைப்படுத்துவதன்மூலமே நாமும் நம் சந்ததியும் இனமும் நலம் பெறக்கூடும் என்ற முடிவின்மீது தொண்டாற்ற முன்வரவேண்டும் என்றும், சுயநலக்காரர்களையும் கட்சியை தன் வாழ்வுக்கு படிக்கட்டாக உபயோகிக்கவரும் புல்லுருவிகளையும் துணிவோடு வெறுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

## பார்ப்பனப் பாதுகாப்பு மாநாடு

---

சேலத்தில் பார்ப்பனப் பாதுகாப்பு மாநாடு நடந்து முடிந்துவிட்டது. அதன் தலைவர் சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் பார்ப்பனர்களுக்கு நல்லுபதேசம் செய்திருக்கிறார் என்றாலும் அவையும் மற்றும் அங்கு நடந்த பல விஷயங்களும் எந்தப் பத்திரிகையாலும் சரியாக பிரசுரிக்கப்படவில்லை. எனினும் சர் சி. பி. சொன்னவற்றில் பலவற்றை நாமும் ஆதரிக்கிறோம்.

பார்ப்பனர் உத்தியோகத்தில் போட்டிபோடுவதை இன்று நாம் குறைகூறவில்லை. அவர்கள் பாங்கிகள், மில்லுகள், வியாபாரங்கள் வைத்து பணம் பெருக்குவதை நாம் தடுக்கவில்லை. இவைகளை நாம் ஆதரிக்கவும் இவற்றிற்கு ஆக உதவவும்கூடச் செய்வோம்.

பார்ப்பனர்கள் உத்தியோகம் பதவி பெறுவதனால் நம்மவர்களில் சிலர் உத்தியோகம் பதவி பெற்று நம் சமுதாயத்தைக் காட்டிக்கொடுத்து நமக்கு கேடு செய்தாவது சுயநலம் தேடுவது போன்ற அளவைவிட அதிகமாக செய்துவிடமாட்டார்கள். பார்ப்பனர் பாங்கி வியாபாரம் மில் முதலிய பணம் சேகரிக்கும் காரியம் செய்தால் நம்மவர்களில் பெருத்த லேவாதேவியும் மில்லும் கைத்தொழில் ஸ்தாபனங்களும் வியாபாரமும் செய்து பணம் தேடிக்கொண்டவர்கள் அப்பணத்தால் நமக்குச் செய்யும் கேட்டைவிட அலட்சியத்தைவிட எதிரிகளை காப்பாற்றுவதைவிட அதிகமான கெடுதி செய்துவிடுவார்கள் என்று நாம் அஞ்சவில்லை. பார்ப்பனர்கள் சிலர் வக்கீல், திவான், ஜட்ஜுகள், பெரிய ஸ்டேட்ஸ்மென்கள் ஆகிவிட்டால் நம்மவர்களில் 100க்கு 99வக்கீல் 100க்கு $99\frac{3}{4}$ ஜட்ஜுகள் 100க்கு 100 ஸ்டேட்ஸ்மென்கள் செய்யும் அலட்சிய புத்திகேடு பச்சை சுயநலம் ஆகியவைகளைவிட அதிகமாய் செய்துவிடுவார்கள் என்று நாம் பயப்படவில்லை. ஆகையால் அத்துறைகளில் நாம் அவர்களது முன்னேற்றத்தைத் தடுக்கவேண்டும் என்கின்ற ஆசைகொள்ள வேண்டியது நமது முக்கியமான காரியம் என்று நாம் இப்போது கருதவில்லை. அத்துறையில் பார்ப்பனர்கள் திரும்பவேண்டும் என்றுகூட ஆசைப்படுகிறோம்.

ஆனால் நாம் எதை வெறுக்கிறோம்! எதை தடுக்கும்படியும் வெறுக்கும்படியும் மக்களை வேண்டுவதோடு, வெறுப்பதிலும் தடுப்பதிலும் நமது முழு முயற்சியைக்காட்டி கிளர்ச்சிசெய்து அதனால் வந்ததையும் அனுபவிக்க வேண்டும் என்றுசொல்லுகிறோம் என்றால் இம்மாதிரியான அதாவது படிப்பு, உத்தியோகம், பதவி, தொழில், செல்வம் முதலியவை ஏற்படுவதற்கு நம்மைவிட பார்ப்பனருக்கு உள்ள—அதிகப்படியான நீதியற்ற இயற்கைக்கு விரோதமாக நாம் செய்து கொடுத்துள்ள தனியான—அதிகப்படியான சலுகையை—சவுகரியத்தை (Special Privileges) நிறுத்தவேண்டும், அவை அழிக்கப்படவேண்டும் என்றுதான் சொல்லுகிறோம்.

உதாரணமாக இன்று பார்ப்பனர்களில் வாழ்க்கையின் சகல துறையிலும் மேம்பாடாக இருக்கும் பார்ப்பனர்கள் இந்த நிலை அடைந்ததற்கு முக்கியகாரணம் அவர்கள் சக்தியோ லேவாதேவியோ மில்லோ வியாபாரமோ கைத்தொழிலோ விவசாயமோ கூலியோ ஆகியவை செய்து அதன்மூலம் வசதி ஏற்படுத்திக்கொண்டு இயற்கை நியதிப்படி முன்வந்தவர்களல்ல என்பதை தோழர்கள் சர் முத்துசாமி அய்யர், சர் பாஷியம் அய்யங்கார், சீனிவாசய்யங்கார் அல்லாடி கிருஷ்ணசாமி, மகாகனம் சாஸ்திரி, ஆர்.வி. கிருஷ்ணய்யர் முதலிய 100க்கு 99பார்ப்பனர்களின் பெற்றோர் நிலை அவர்களது ஆரம்பகால நிலை முன்னைநிலை ஆகியவைகளைப்பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

பார்ப்பனர்களின் இன்றைய உயர்நிலைக்குக் காரணம் நமது வீட்டுக் கல்யாணம், கருமாதி, திவசம், புரோகிதம், நாம் கட்டின கோவில்களில்பூசை, நாம் போய் உண்ணும் காப்பிக்கடை, ஓட்டல் முதலாகிய காரியங்களாலும், நாம் ஒப்புக்கொண்டு அடிமையாகி இழிநிலை ஏற்றுக்கொண்ட மதம் ஆகியவற்றாலும் பார்ப்பனரை மேலான பிறவி என்று மதித்து மரியாதைசெய்து நாம் தர்மத்தின் பேரால், யாசகத்தின் பேரால் கொடுத்த பணத்தாலும் காட்டின இடம், கொடுத்த சலுகையாலுமே இந்நிலைக்கு வந்தவர்களாவார்கள். அதனால் அவர்கள் இந்த நிலைக்கு வந்ததால் அந்த நிலையை காப்பாற்ற தங்கள் பதவி செல்வம் முதலியவைகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆதலால் நாம்

அந்தக் காரியங்களைத்தான் சடுக்கவேண்டும், வெறுக்கவேண்டும். அதற்குஆக உதைபடவேண்டும், அடிபடவேண்டும், சிறை செல்ல நேர்ந்தாலும், சாகநேர்ந்தாலும் சாகவேண்டும் என்கிறோம்.

அதைவிட்டுவிட்டு நாம் சீமை சென்று, சட்டசபை சென்று, பதவிபெற்று இந்த சங்கதியை சொல்லிவிட்டு வருவதனால் எல்லாம் இங்கு பார்ப்பனனைக் கொண்டு புரோகிதம் செய்துகொண்டும், பார்ப்பனனைக் கொண்டு சாமி கும்பிடுகிறவனுமான மடையன்கள் ஒருநாளும் திருந்தி பார்ப்பனர் ஐ. சி. எஸ்., ஜட்ஜு; மில் முதலாளி, பாங்கர் ஆவதற்கு தகுதிஇல்லாமல் சவுகரியம் கொடுக்கும் பணத்தை நிறுத்திவிடமாட்டான். ஆகையால் பார்ப்பனர்களை உத்தியோகம் வியாபாரம், பாங்கி, யந்திர முதலாளித்தனம் ஆகியவைகளில் இருந்து விரட்டுவதோ, தடுப்பதோ என்பவை வெறுங்கனவும், முட்டாள்தனமுமாகும். ஆனால் கோவில் பூசை, கல்யாணம், கருமாதி, திவசம், காப்பிகடை, ஓட்டல் முதலாகிய ஜாதிஉயர்வில் இருந்து விலக்குங்கள், கவிழ்த்துங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

## சபாஷ் காந்தி "ஜீ"

காந்தியார் தான் ஜன்மமெடுத்ததற்கு அடையவேண்டும் என்று எண்ணி இருந்த காரியத்தில் அவர் வெற்றிபெற்றுவிட்டார். அதற்குஆக அவரைப் பாராட்டி "சபாஷ்" கூறுகிறோம். தாம் மகாத்மாவானதோடு அவர் திருப்தியடையவில்லை. அவருடைய விருப்பம்போலவே அவரது சீடர்கள் அவரைக் கடவுளாக்கிவிட்டார்கள். நெடுநாளாக அவர் விரும்பினதும் அதுதான். அவரது சீடர்களுக்கு வேண்டியதாய் இருந்ததும் அதுதான். மகாத்மா என்று சொல்லி மக்களை ஏய்த்ததைவிட அவரைக் கடவுள் என்றே சொன்னால் இன்னும் சுலபமாய் ஏமாற்றலாமல்லவா? ஆதலால் வடநாட்டில் ஒரு ஊரில் (ஸ்ரீபூரில், பெகுசாராய் சப்டிவிஷன்) காந்தியாருக்கென தனிக்கோவில்கட்டி, அக்கோவிலுக்குள் காந்தி விக்ரகத்தை ஆகமப்படி பிரதிஷ்டை கும்பாபிஷேகம் முதலியன செய்வித்து இப்போது விதிப்படி பூசை நடந்து வருகிறது.

இந்த உண்மை இவ்வார இந்திய அசோசியேட் [பிரஸ் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. மனிதனாகப் பிறந்தவன் அடையவேண்டிய முடிவான நிலையை காந்தியார் அடைந்துவிட்டார், அதாவது கடவுளோடு கலப்பதைவிட கடவுளே ஆகிவிட்டார். இனி நம் மாகாணத்திலும் அப்படிப்பட்ட "கோயில்களை" காந்தி பேரைச் சொல்லிப் பயனடையும் காந்தி பக்தர்கள் கட்டியே தீருவார்கள்.

## நடக்க இருப்பவை

★31-3-46 ஞாயிறன்று கூடலூர் O. T. திராவிடர் கழக ஆண்டு விழா மாநாடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ரா. திராவிடநாடு படத் திறப்பு: சென்னை C, D. T. அரசு, பெரியார் படத்திறப்பு: ஆ. திராவிடமணி, கறுப்புச்சட்டைப்படையின் அவசியம்: A.V.P. ஆசைத்தம்பி. மற்றும் தோழர்கள் காஞ்சி கலியாணசுந்தரம், எ. பி. சனார்த்தனம், கே. அன்பழகன் முதலியோர் கலந்துகொள்வார்கள்.

★14-3-46 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னைக்கடுத்த வில்லிவாக்கம் சமதர்மசங்கச் சார்பில் வில்லிவாக்கம் ப[illegible]ஸ்டாண்டு மைதானத்தில் தோழர் C. D. T. அரசு அவர்கள் தலைமையில் தோழர்கள் எ.பி. சனார்த்தனம், கே. அன்பழகன், என். வி. நடராசன், சி. தங்கராசு முதலியோர் பேசுவார்கள்.

★24-3-46 ஞாயிறு காலை 10 மணிக்கு இராமநாதபுரம் ஜில்லா திராவிடர் கழக இரண்டாவது மாநாட்டு வரவேற்புக்கமிட்டி அமைக்கும் கூட்டம் சிவில்லிபுத்தூரில் நடைபெறும். மாவட்டத்தோழர்கள் வருமாறு கோரப்படுகிறார்கள்.

★20-3-46ல் திருச்சி சிறையிலிருந்து விடுதலையாகும் பட்டுக்கோட்டை தோழர் சாமிநாதன் அவர்களை வரவேற்று ஊர்வலமும், கூட்டமும் திருச்சி நாகம்மையார் திராவிடர் கழகத்தார் நடத்துவர். தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

★20-3-46 புதன் மாலை 7மணிக்கு மாநாட்டு வரவேற்புக்கமிட்டி கூட்டம் வடசென்னை திராவிட நடிகர் கழகத்தில் நடைபெறும். தோழர்கள் அனைவரும் வரவேண்டுமென தோழர் எம். கே. டி. சுப்ரமணியன் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 13ந்தேதி சேலம் சென்று அங்கு ஒரு மறுமணமும், ஒரு கலப்பு மணமும் அதாவது தோழர்கள் லிங்கசாமி—சகுந்தலை மறுமணமும், சுப்ரமணியம்—கமலா தேவாங்கர் ஆதிதிராவிட கலப்பு மணமும் நடப்பதற்கு தலைமை வகித்துவிட்டு 14ந் தேதி ஈரோடு வந்து 15ந்தேதி சென்னை புறப்பட்டுவிட்டார். சென்னையில் 2, 3 நாள் இருந்துவிட்டு 20ந்தேதி வாக்கில் ஈரோடு வருவார்.

## தேர்தலுக்காக விலகினார்

உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுக்கா பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்கி தாம் சென்னை சட்டசபை தேர்தலுக்கு நிற்கவேண்டி சயங்கொண்டம் தோழர் எம். பாஸ்கரன் அவர்கள் திராவிடர் கழக திட்டங்களுக்குட்பட்டு தாம் வகித்துவந்த திருச்சி மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் பதவியையும், திராவிடர் கழக அங்கத்தினர் பதவியையும் இராசினாமா செய்துவிட்டு தேர்தலுக்கு நிற்கிறார்.

## 'தினசரி' பித்தலாட்டம்

"தினசரி பத்திரிகை 3-3-46ல் நான் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக சென்னை அசெம்பிளி தேர்தலுக்கு நாமக்கல் பொதுத் தொகுதிக்கு நாமினேஷன் செய்ததாக வெளியான செய்தி பொய் என்பதை இவ்வறிக்கைமூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேன்" என்பதாக தோழர் என். கிருஷ்ணராஜ் அவர்கள் அறிவிக்கிறார். பத்திரிகை நிருபர்கள் செய்து வருகிற பித்தலாட்டங்களில் இதுவும் ஒன்று.

## தென்னாற்காடு மாவட்ட தோழர்களுக்கு

7-4-46ல் குறிஞ்சிப்பாடியில் தெ. ஆற்காடு மாவட்ட கறுப்புச்சட்டைப் படை மாநாடு நடைபெறுவதால் மாவட்டத்தில் ஆங்காங்கு கறுப்புச்சட்டைப் படை அமைத்து மாநாட்டிற்கு வந்து கலந்துகொள்வதோடு, தொண்டர்கள் எண்ணிக்கை, நிர்வாகஸ்தர்கள் முதலிய விவரங்களை கே. டி. பி. பழனியப்பன். திராவிடர் கழகம், குறிஞ்சிப்பாடி என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிறோம். குறைந்தது 1000 தொண்டர்களாவது வந்து கலந்துகொள்ள வேண்டுமென விழைகிறோம்.

தெ. ஆ. மாவட்ட க. ச. படை,
மாநாட்டு வரவேற்புக் குழுவினர்,
குறிஞ்சிப்பாடி.

## சென்னைத் தோழர்களுக்கு

சென்னை ஜில்லா திராவிடர் பெடரேஷன் அமைப்பாளர்களிடமும், என்னிடமும் உறுப்பினர் இரசீது புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்கள் அனைவரும் விரைவில் பூர்த்திசெய்து அனுப்பும்படி வேண்டுகிறோம். இவைகள் அனுப்பப்பட்டபின்னர்தான் மேற்கொண்டு தருவிக்கமுடியுமாதலால் உடனே அன்பு கூர்ந்து பூர்த்திசெய்து அனுப்பவேண்டுகிறோம்.

என். வி. நடராசன்,
பொதுச் செயலாளர்.

## திருச்சி மாவட்டத் தோழர்களுக்கு

நம் மாவட்டத்தில் இவ்வாண்டில் 10000 அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டியுள்ளதால் ஆங்காங்குள்ள திராவிடர் கழக நிர்வாகஸ்தர்களும, பிற தோழர்களும் கீழுள்ள முகவரியில் இரசீது புத்தகங்கள்பெற்று அன்புகூர்ந்து உடனே அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக் கோருகிறேன்.

எம். நடராசன், செயலாளர்,
திருச்சி மாவட்ட திராவிடர் கழகம்.

## கோனாரின் குதர்க்கம்

28-2-46வியாழனன்று திருச்சி ஜோசையப்பர் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் தளபதி அண்ணாதுரை அவர்கள் பேசுவதாக இருந்ததை அக்கல்லூரி தமிழாசிரியர் அய்யம் பெருமாள் கோனார் பெருமுயற்சிசெய்து தடுத்துவிட்டாரென்றும், கோனாரின் குதர்க்கத்தைக்கண்ட மாணவர்கள் கொதிப்படைந்து 1000பேருக்கு மேல் ஊர்வலமாக வந்து கோனார்மீது தமக்கிருந்த வெறுப்பைக்காட்ட, இந்த யறிந்த கோனார் ஒய்வெடுத்து தலை மறைவாய் வெளியூர் சென்றுவிட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## தஞ்சை மாவட்ட தலைமை திராவிடர் கழகம்

### குடந்தையில் நிறுவப்பட்டது

10-3-46ல் குடந்தையில் தோழர் பாஷியம் அவர்கள்தலைமையில் தஞ்சை மாவட்ட திராவிடர் கழகப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்று கீழ்க்கண்டவர்களைக்கொண்ட நிர்வாகக்கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டு தலைமை ஆபீஸ் குடந்தையில் இருப்பதென முடிவு செய்யப்பட்டது.

தலைவர். தோழர் பி. ஆர். பொன்னுசாமி குடந்தை, துணைத்தலைவர்: வி. பி. என். பாபு மன்னார்குடி, பிரதம செயலாளர் & பொருளாளர்: வி. சின்னதம்பி குடந்தை, துணைச்செயலாளர்: எ. கே. ஆர். சாமி தஞ்சை, கணக்குப் பரிசோதகர்; டி.கே. விசயராகவலு பி.எ. பி. எல்., நாகை.

மற்றும் தோழர்கள் கே. கே. நீலமேகம், கிவளூர் ஆர்.வி. இராசன், எம்.எம். நடராசன், வி. ஜி. ரெங்கராசு, தோழியர் இராமாமிர்தம் உட்பட 28-பேர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேற்கொண்டும் 4-பேரைக் கோஆப்ட் செய்துகொள்ளும் அதிகாரமும் கமிட்டித் தலைவருக்கு அளிக்கப்பட்டது.

## தீமிதித்தல் ஏமாற்றுவித்தை

12-3-46ல் நடைபெற்ற கரூர் காமாட்சியம்மன் திருவிழாவில் ஆச்சாரத்தோடு, அம்மையிடம் பக்தியாய், ஆண்டவன் அருள் கொண்டு ஆஸ்திகர்கள் நெருப்புக்குழியில் தீ மிதிக்க இறங்கிய பொழுது தீமிதித்தல் ஏமாற்றுவித்தை என்பதை நிரூபிக்க கறுப்புச்சட்டைப் படை இளைஞர்கள் 6-பேர் கறுப்புச் சட்டையணிந்து ஆச்சாரம், பக்தி, அருள், ஒன்றும் இல்லாமலே தாமும் அவர்களுடன் தீமிதித்து ஏறினர். இனி இம்மாதிரி ஏமாற்றுவித்தைகள் பலிக்காது என ஆஸ்திகர்கள் கலக்கங்கொண்டு விட்டதாக கரூர் நிருபர் எழுதுகிறார்.

## தென்னாற்காடு மாவட்ட திராவிடர்கழக 3வது மாநாடு

2-3-46 சனிக்கிழமையன்று விருத்தாச்சலம் ரேடியோ மைதானத்தில் அமைக்கப்பட்ட பன்னீர் செல்வம் பந்தலில் தளபதி அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தலைவர் ஊர்வலத்திற்குப் பின் தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் அவர்கள் திராவிடர் கழகக்கொடி ஏற்றுவித்தார்கள். தில்லை புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். தோழர் ஆ. திராவிடமணி அனைவரையும் வரவேற்றார். தலைவரின் தலைமைப்பேருரையோடு இடைவேளை உணவிற்குக் கலைந்தது.

பிற்பகலில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், டி, கே. சீனிவாசன், காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரையாக சுமார் 2மணி நேரத்திற்கு மேல் தற்கால அரசியல் நிலையைப்பற்றி விளக்கமாகப் பேசினார்கள். பல கழகங்களின் சார்பில் தலைவருக்கு வாழ்த்துரைகள் படித்தளிக்கப்பட்டன. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் ஆ. திராவிடமணி நன்றி கூறினார். மாநாட்டைச் சிறப்பாக நடத்த, தோழர் சி. முனுசாமி அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். தோழர் பொன்னரசன், மாணவர்கள் பலர் உடனிருந்து வெற்றிகரமாக நடத்தினர்.

## தாழ்த்தப்பட்ட மக்கள் தேர்தலை நிராகரிக்க வேண்டும்

25-2-46ல் அல்மோராவில் தோழர் இராய்பகதூர் ஹரிபிரசாத் டாம்டா அவர்கள் தலைமையில் நடைபெற்ற குமவான்ஷிலிப்கார் சபா தலைவர்கள் மாநாட்டில் பூனா ஒப்பந்தத்தால் சாதி இந்துக்களால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏமாற்றப்பட்டதால் அவ்வொப்பந்தத்தை ரத்துசெய்ய வேண்டும் என்று சர்க்காரைப் பல முறை கோரியும், சர்க்கார் மதிக்காததால் தற்பொழுது நடைபெறும் தேர்தலைத் தாழ்த்தப்பட்ட மக்கள் நிராகரிக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

சென்னை மாகாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் எக்காரணத்திற்காக தேர்தலில் முனைந்து மும்முரமாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

## ஒத்துழைக்க வாரீர்!

வரும் கோடை விடுமுறையில் மாணவர் கூட்டம் பிரசாரத்திற்குக் கிளம்புகிறது. அதில் கலந்துகொள்ள விரும்பும் சொற்பொழிவாளர்களும், புலவர்களும் தங்கள் பெயர்களை ஈரோடு திராவிட மாணவர் பிரசாரக் கழக செயலாளருக்கு அறிவிக்கவேண்டுகிறோம்.

---

கோவை பிராமின் எக்ஸ்டென்ஷன் ஆரம்ப பாடசாலையில் 1-2-46ல் மாணவர் சங்க சார்பில் தோழர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றினார்.

## கழகம் அமைத்தார்கள்

11-3-46ல் நிலக்கோட்டை தாலூகா பாலமேட்டில் தோழர் ம. ச. கு. கந்தசாமி அவர்கள் தலைமையில் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்று தோழர் ம. ச. கு. கந்தசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட நிலக்கோட்டை தாலுக்கா திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அமைக்கப்பட்டது.

o o

10-3-46ல் திருத்துறைப்பூண்டி தாலுக்கா சண்பகராயநல்லூரில் தோழர் வி. சுப்பையன் தலைமையில்கூடிய கூட்டத்தில் தோழர் வி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது.

o o

3-3-46ல் திருவாரூரில் திருவாரூர் தாலுக்கா திராவிடர் கழகக் கமிட்டி கூட்டம் நடைபெற்று தோழர்கள் வி.ஜி, இரெங்காரசு, வி. எஸ். பி. யாகூப் ஆகியோர் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். தோழர்கள் டி. கே. விசயராகவலு பி. ஏ. பி. எல்., வி.ஜி. இரெங்கராசு இருவரும் ஜில்லா கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

o o

3-3-46ல் பட்டுக்கோட்டை திராவிடர் கழகக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்று தோழர் என். இரத்தினசாமி அவர்கள் ஜில்லா கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

o o

25-2-46ல் திருத்துறைப்பூண்டி தாலுக்காவிற்கு தோழர் ஜி. சண்முகம் அவர்கள் தலைவராகவும், ஆர். சாமிநாதன் செயலாளராகவும் கொண்ட திராவிடர் கழக நிர்வாகக்கமிட்டி அமைக்கப்பட்டது.

o o

17-2-46ல் சென்னை பெரம்பூர் போக்ஸ் ஓட்டேரி, கூக்ஸ்ரோடு 41ம் எண் இல்லத்தில் நடைபெற்ற திராவிடர்கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் மேற்கு சென்னை திராவிடர் கழகத்திற்கு தோழர் சி. ஏகாம்பரம் அவர்களைத் தலைவராகக்கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. மேற்கு சென்னை சுயமரியாதை சங்கத்திற்கும் தோழர் சி. தங்கராசு அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது.

o o

12-3-46ல் இராசபாளையத்தில் திருவில்லிபுத்தூர் தாலுக்கா திராவிடர் கழகத்திற்கு தோழர் ஆர். பி. ஆதிநாராயணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது.

o o

24-2-46ல் திருநெல்வேலி திராவிடர் கழக மேடையில் தோழர் கே. எம். பிரமநாயகம் அவர்கள் தலைமையில் நடந்த திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் திருநெல்வேலி தாலுக்காவிற்கு தோழர் எ. வி. முத்தையா பிள்ளை அவர்களைத் தலைவராகக்கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது.

o

17-2-46ல் பழனி நகர திராவிடர் கழக உறுப்பினர் கூட்டத்தில் 1946ம் ஆண்டிற்கு கே. நாராயணசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

22-2-46ல் குளத்தூர் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்று 1946ம் ஆண்டிற்கு தோழர் வெ. மு. நடராசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிட்டி நிறுவப்பட்டது.

o o

1-3-46ல் தேசூர் திராவிடர் கழகக் கூட்டம் நடைபெற்று 1946ம் ஆண்டிற்கு தோழர் வீ. பராங்குச இரங்கசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக்கமிட்டி நிறுவப்பட்டது.

o o

4-3-46ல் தாராசுரம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் ஆர். எஸ். பி. கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழு நிறுவப்பட்டது.

o o

22-2-46ல் கல்லக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழகக்கூட்டத்தில் தோழர் எஸ். கே. முத்துசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட தாலூகா கமிட்டி நிறுவப்பட்டது. தோழர்கள் பி. சி. இராமலிங்கம், கு. நல்லதம்பி ஆகியோர் கழகநோக்கம்பற்றிப்பேசினர்.

o o

24-2-46ல் மால் வாயில் தோழர் சி. இராமசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிடர் கழகச் செயற்குழு அமைக்கப்பட்டது. தோழர்கள் இராமலிங்கம், நல்லதம்பி கழக நோக்கம் பற்றிப் பேசினர்.

o o

1-2-46ல் தஞ்சாவூர் பள்ளியக்கிரகாரத்தில் ஐ. கே. துரைராசன் அவர்கள் தலைமையில் திராவிட இளைஞர் கழகம் அமைக்கப்பட்டது. 9-2-46ல் நடைபெற்ற கூட்டத்தில் பாகவதர், கிருஷ்ணன் விடுதலை கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

o o

3-3-46ல் பெங்களூர் மாவட்ட திராவிடர் கழகக்கூட்டம் நடைபெற்று புது ஆண்டிற்கு தோழர் ச. கு. கணேசன் அவர்களைத் தலைவராகக்கொண்ட செயற் குழு அமைக்கப்பட்டது. தோழர் கோ. சீனுவாசன் அவர்கள் நிலை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கத்தினர் சேர்த்தல்பற்றி முடிவு செய்ததோடு தோழர் சிங்காரவேல் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## அங்கத்தினர் சேர்த்தல்

தோழர்களே, அந்தந்த மாவட்டத்தில் இதுவரை சேர்த்துள்ள அங்கத்தினர்கள் எண்ணிக்கைக் குறிப்பை அடுத்த கிழமையிலிருந்து வெளியிட வேண்டியிருப்பதால் இதுவரை இரசீது புத்தகங்கள் பெற்ற தோழர்கள் உடனே அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக் கோருகிறேன்.

இன்னும் அநேக திராவிடர் கழகங்களிலிருந்து இரசீது புத்தகங்கள் அனுப்புமாறுஎழுதவேயில்லை. எல்லாத் தோழர்களும் உடனே தேவையான இரசீது புத்தகங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்வதோடு அன்புகூர்ந்து அயராது முயன்று அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக் கோருகிறேன்.

கழகத்தில் அங்கத்தினராக்ச் சேர விரும்பும் (கழகம் இல்லாத இடங்களிலுள்ள) தனிப்பட்ட தோழர்கள் $5\frac{1}{2}$ அணா தபால் தலை அனுப்பிவைத்தால் அங்கத்தினராக சேர்த்துக்கொண்ட இரசீது அனுப்பி வைக்கப்படும்.

## கழகம் அமைத்தல்

அநேக மாவட்டங்களில் இன்னும் முறையாக மாவட்ட தலைமை திராவிடர் கழகம் அமைக்கப்படவில்லை. தாலூகா கழகங்களும் அமைக்கப்படவில்லை.

அந்தந்த மாவட்ட முக்கியஸ்தர்கள் உடனே மாவட்ட, தாலூகா கழகங்களை அமைத்து நிர்வாகஸ்தர்கள் பெயர்களை தெரிவிக்குமாறு கோருகிறேன.

செயலாளர்,
திராவிடர் கழகம்,
தலைமை நிலையம், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE